අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/27/15/01/2024

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.04.19

**Tamil Translation**

அனைத்து தேசிய பாடசாலை அதிபர்களுக்கும்,

**2024 தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்கள் கேரல்**

01. வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 2024இன் கீழ் தேசிய பாடசாலை ஆசிரியர்களது இடமாற்றங்களை மேற்கொள்வதற்காக நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப் படிவங்களைக் கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறையினூடாக ஆசிரியர் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்குரியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைக் கையேட்டின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.
இந்த இடமாற்றங்கள் யாவும் 02 பிரதான வகுதிகளை உள்ளடக்கியவையாகும்.

**1.1 <u>முதலாம் வகுதி: பத்து வருட கட்டாய இடமாற்றம்</u>**

1.1.1 2023.12.31 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் தற்போது நிரந்தரமாக சேவையாற்றும் தேசிய பாடசாலையில் 10 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த, 55 வயதிற்கு குறைந்த ஆசிரியர்கள் கட்டாயம் வருடாந்த ஆசிரியர் இடமாற்றச் செயன்முறைக்கு உட்படுவர்.

1.1.2 தனிப்பட்ட தேவைகள் காரணமாக பெற்றுக்கொண்ட தற்காலிக இணைப்புக்கள். தனிப்பட்ட தேவைகளுக்காக பெற்றுக்கொண்ட உள்நாட்டு/ வெளிநாட்டு சம்பளத்துடன் கூடிய/ சம்பளமற்ற விடுமுறைகள் என அனைத்தும் சம்பளம் பெறும் பாடசாலையின் சேவைக் காலத்தில் உள்ளடங்கும் வகையில் கணக்கிடப்படும்.

1.1.3 **<u>10 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்தமை காரணமாக இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டாலும் எவரேனும் ஒரு ஆசிரியர் குறிப்பிட்ட திகதியினுள் நிகழ்நிலை மூலமாக இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கவில்லை எனின்,</u> TTB/10/2024/02 மற்றும் TTB/10/2024/03 <u>ஆகிய ஆவணங்களை பூரணப்படுத்தி அதிபரது பரிந்துரையுடன் அனுப்பிவைத்தல்</u>**

வேண்டும். இந்த தகவல்களின் அடிப்படையில் குறித்த ஆசிரியர்களுக்கு ஆசிரியர் இடமாற்ற சபையினால் இடமாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 2.1 இரண்டாம் வகுதி: வருடாந்த இடமாற்றம்

1.2.1 முதலாம் வகுதிக்கு, அதாவது பத்து வருட கட்டாய இடமாற்றத்திற்கு உட்படாத, ஒரே பாடசாலையில் 10 வருடங்களை விடக் குறைவான சேவைக் காலத்தை உடைய ஆசிரியர்களும் தமது தேவைகளின் அடிப்படையில் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

02. மேற்படி இரண்டு வகுதிகளுக்கும் உரித்தாகும் அனைத்து ஆசிரியர்களும் https://nstt.moe.gov.lk எனும் இணைப்பினூடாக நிகழ்நிலை மூலம் ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி, அதன் அச்சுப் பிரதியில் கையொப்பமிட்டு அதிபரிடம் தாமே கையளித்தல் வேண்டும். இது தொடர்பாக TTB/2024/I/T உபதேசத்திற்கமைய கவனத்திற்கொள்ளவும்.

2.1 **இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் கால எல்லை 2024.04.25** திகதி முதல் **2024.05.16** திகதி வரையிலான காலப் பகுதியாகும். அனைத்து தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கும் நிகழ்நிலை மூலமாக ஆசிரியர் இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும். அதன் அச்சுப் பிரதியில் ஆசிரியர் தனது கையொப்பத்தையிட்டு **2024.05.17** திகதியோ அத்திகதிக்கு முன்னரோ அதிபரிடம் கையளித்தல் வேண்டும்.

3. அதிபரின் சிபார்சுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பபடிவங்கள் www.nstt.moe.gov.lk எனும் இணைப்பினூடாக பிரவேசித்து Login as a principal, ஊடாக TTB/2024/I/P உபதேசத்திற்கமைய செயற்படவும்.

**3.1** அதிபரின் சிபார்சுக்காக சமர்ப்பிக்கப்பட்ட இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் இறுதித்திகதி 2024.05.27 ஆகும். இக்காலத்தில் அதிபர் சிபார்சு வழங்கிய விண்ணப்பபடிவத்தின் மூலபிரதியின் அச்சுப் பிரதியொன்றை பெற்று அதில் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை பதித்து உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறாக பரிந்துரை வழங்கிய பின்னர் அதிபரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியரின் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியினை ஆசிரியர் கையெப்பமிடப்பட்டுள்ள பக்கத்திற்கு பின் பக்கமாக இணைத்தல் வேண்டும்.

**04** 2024.04.25 - 2024.05.16 ம் திகதி வரைக்கும் நிகழ்நிலை முறைமை ஊடாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்குமாறு ஆசிரியர்களை அறியப்படுத்துதல். இணையத் தொடர்புகளுடன் கூடிய கணணி வசதிகளை வழங்குதல் மற்றும் ஆசிரியர் தானே தனது விண்ணப்பப்

படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்று அதில் கையொப்பமிட்டு **2024.05.17** திகதிக்கு முன்னர் அதிபரிடம் கையளிக்க வேண்டும் எனவும் ஆசிரியர்களை அறியப்படுத்துவது அதிபரது பொறுப்பாகும்.

**5.** ஒவ்வொரு ஆசிரியரதும் இடமாற்ற விண்ணப்பப் படிவத்துடன் கீழ்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) ஆசிரியரது முதல் நியமனக் கடிதத்தின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

(ii) தற்போதைய சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெற்ற கடிதத்தின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

(iii) கற்பிக்கும் தனிப்பட்ட நேரசூசியின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

(iv) நியமனப் பாடமல்லாத பாடங்களைக் கற்பிப்பதாயின் குறித்த பாடத்திற்காகப் பெற்றுள்ள ஆகக் கூடிய தகைமைக்குரிய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

(v) மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் எனின், அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் வைத்தியசாலை ஒன்றில் நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் விசேட வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட TTB/2024/05 படிவம்

மேற்படி ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளமையை அதிபர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன், சகல விண்ணப்பப் படிவங்களிலும் அதிபர் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ பதவி முத்திரையை பதித்திருத்தல் வேண்டும்.

06 அதிபரால், ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவங்களுடன் இணைத்து அனுப்பிவைக்க வேண்டிய உப ஆவணங்கள்

I. TTB/2024 உப ஆவணம் – சரிபார்ப்புப் பட்டியல்

II. TTB/2024/01 உப ஆவணம் – விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் அனைத்து ஆசிரியர்களதும் தகவல்கள் (www.nstt.moe.gov.lk) (அதிபர் இந்த ஆவணத்தின் அச்சுப் பிரதியினை Login as a Download transfer request list இணைப்பினுள் பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.)

III. TTB/2024/02 உப ஆவணம் – தமது பாடசாலையில் சேவையாற்றும், 2023.12.31 ம் திகதிக்கு 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தை உடைய 55 வயதிற்குட்பட்ட நிகழ்நிலை முறைமை ஊடாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத ஆசிரியர்களது பெயர் பட்டியல் (இதில் ஆசிரியர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அது தொடர்பாக குறிப்பிடல் வேண்டும்)

IV. TTB/2024/03 உப ஆவணம் – தமது பாடசாலையில் சேவையாற்றும் 2023.12.31ம் திகதிக்கு முன்னர் 10 வருடங்கள் அல்லது அதற்கு

மேற்பட்ட சேவைக் காலத்துடன் 55 வயதிற்குட்பட்ட கூடிய ஆசிரியர்களுள் நிகழ்நிலை முறைமை ஊடாக விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்காத ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்காக ஆசிரியர் இடமாற்ற சபைக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணம்.

V. TTB/2024/04 உப ஆவணம் – data.moe.gov.lk எனும் இணைப்பினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை அல்லது மிகை ஆசிரியர் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணம்.

07 2024 ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான ஆலோசனைக் கையேட்டினை இத்துடன் அனுப்பிவைக்கின்றேன். அதில் ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் கையேட்டினை தங்களது பாடசாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துதல் வேண்டும். (இது தொடர்பாக ஆசிரியர்களை அறியப்படுத்தி சம்பவத் திரட்டுப் புத்தகத்திலும் குறிப்பிடல் வேண்டும்)

08 சகல விண்ணப்பப் படிவங்களும் உள்ளடங்கிய கோவையினை 2024.05.17 ம் திகதி முதல் 2024.05.28 ம் திகதி வரையான காலப் பகுதியினுள் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றக் கிளையில் அதிபர் அல்லது அதிபரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதி/ உதவி அதிபர் ஒருவர் கொண்டு வந்து கையளித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான **2024.05.28** ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

09 நிகழ்நிலை மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் கோரப்பட்டுள்ள ஆவணங்கள், அதிபரால் ஒவ்வொரு கோவைத் தொகுதிகளாக கையளிக்கப்படல் வேண்டும். அது தவிர்த்து தனிப்பட்ட ரீதியில் கொண்டு வந்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் அல்லது தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும் எந்தவொரு விண்ணப்பப் படிவங்களும் கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தனிப்பட்ட ரீதியில் அனுப்பிவைக்கப்படும் சகல ஆவணங்களும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10 இத்துடன் கீழுள்ள இணைப்புக்கள் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

- நிகழ்நிலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்
- நிகழ்நிலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவத்திற்கு பரிந்துரை வழங்குதல் மற்றும் இடமாற்ற விண்ணப்பப்

படிவங்களை கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்க வேண்டிய விதம் தொடர்பாக அதிபர்களுக்கான ஆலோசனைகள்

- தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவங்களை கோருதல் – 2024 இற்குரிய ஆலோசனைக் கையேடு (பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துவதற்காக.)
- TTB/2024 - சரிபார்த்தல் பட்டியல்
- TTB/2024/02 - உப ஆவணம்
- TTB/2024/03 - உப ஆவணம்
- TTB/2024/05 - உப ஆவணம்

11 மேலதிக ஆலோசனைகள் அல்லது ஏதேனும் பிரச்சனைகள் காணப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளவும்.

| | |
|---|---|
| நிகழ்நிலை மூலமாக ஆசிரியர் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கும் போது தொழில்நுட்பம் சார் பிரச்சனைகள் இருப்பின் | 011-2075854 (தரவு முகாமைத்துவக் கிளை) |
| தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றக் கிளையுடன் தொடர்பு கொள்வதற்கு | 011-2784434 |

ஜே.எம். திலகா ஜயசுந்தர

செயலாளர்

கல்வி அமைச்சு